<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

**<u>O.S.No.295/2022</u>**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சங்கர் |
| தகப்பனார் / கணவர் | .. | பாபு |
| வயது | .. | 47 |
| தொழில் | .. | விவசாயம் |
| கிராமம் | .. | எறையூர் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அதனை படித்து பார்த்தேன். எனது முதல் விசாரணையிலும் மற்றும் பிற ஆவணங்களிலும் ஆவணங்களை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் என்னுடன் தான் எறையூர் கிராமத்தில் வசித்து வருகிறார். என் தாயார், தங்கை, தம்பி என்னுடன் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, என் தங்கை சென்னையிலும், தம்பி வேறு இடத்திலும் வசித்துவருகிறார்கள். இந்த வழக்கு பற்றி முழு விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். குடும்ப தலைவர் என் அப்பா தான் என்றால் சரிதான். குடும்ப நிர்வாகத்தை அவர் தான் செய்து வந்தார் என்றால் சரியல்ல, தனியாக வசித்து வருகிறோம். என் தம்பி 500 அடி தள்ளி வசித்து வருகிறார். நான் சென்னையில் 5 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது சென்னையில் வசித்து வந்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம்

எனக்கு தெரியாது. என் தகப்பனாரின் தாயார் செல்வியம்மாள் என்றால் சரிதான். அவர் பெயரில் எந்த வித சொத்தும் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என் பெரிய தகப்பனார் என்றால் சரிதான். அவருடைய தாயார் பெயர் அங்கம்மாள் என்றால் தெரியாது. என் தாத்தாவிற்கு இரண்டு மனைவிகள் அங்கம்மாள் மற்றும் செல்வியம்மாள் உள்ளனர் என்றால் சரிதான். 1932 ஆம் ஆண்டு அங்கம்மாளும், வெள்ள கவுண்டரும் ஒரு சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் வாங்கியிருக்கலாம். மேற்படி கிரைய பத்திரத்தில் அங்கம்மாளும், வெள்ள கவுண்டர் ஆகிய இரண்டு பெயரிலும் எழுதியுள்ளார்கள் என்றால் தெரியாது. இந்தவழக்கு தாக்கல் செய்யும் முன்பு பூர்விக சொத்துக்கள் மற்றும் பூர்விக வாரிசுகள் குறித்து விசாரணை செய்தேனா என்றால் விசாரித்தேன். வெள்ள கவுண்டர் பெயரில் இருந்த சொத்தை அவரது தம்பிக்கு எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**